செய்தி வெளியீடு எண்:243 நாள்: 29.04.2017

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2016 ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலுக்காக வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் அரசு நிலங்களிலிருந்து தேவையான களிமண் எடுத்துக்கொள்ள மண்பாண்ட தொழிலாளர்களுக்கு சிறப்பு சலுகை அளிக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்கள். இந்த அறிவிப்பினை செயல்படுத்திட விதிகளில் திருத்தம் செய்து தற்போது தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது நிலவி வரும் கடுமையான வறட்சியின் காரணத்தினால் ஏரி மற்றும் நீர்நிலைகள் போதிய நீரின்றி வறண்டு காணப்படுகிறது. இச்சூழ்நிலையை பயன்படுத்தி விளை நிலங்களின் மண் வளத்தினை வண்டல் நிரப்புவதன் மூலம் மேம்படுத்தவும், நீர்நிலைகளை தூர்வாரி அதன் கொள்ளளவை அதிகப்படுத்தி வருங்காலத்தில் விவசாய பணிகளை மேம்படுத்தவும், வறட்சியின் தாக்கத்தினை குறைக்கும் நோக்கத்திலும், தமிழக அரசு மாநிலத்திலுள்ள பாசன வசதி பெறும் நீர்நிலைகளில் குடிமராமத்துப் பணிகளை மேற்கொள்ள முடிவு எடுத்துள்ளது.

அதன் அடிப்படையில் நீர்நிலைகளில் படிந்துள்ள களிமண், வண்டல் மண்ணை அப்புறப்படுத்தி அவற்றை விவசாய பணிகளுக்கு பயன்படுத்தும் நோக்கில் 1959–ம் வருடத்திய தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளில் விதி 12–ல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

அதற்கேற்ப, பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சிதுறை மற்றும் பஞ்சாயத் ராஜ்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளான ஏரிகள், ஆயக்கட்டுகள், பாசனவசதி தரும் நீர்நிலைகளை தூர்வாரி மேம்படுத்துவதால் அதன் கொள்ளளவை அதிகரிக்கவும், இதற்கான பணிகளை முறையாக செயல்படுத்த அரசு விதி 12–ல் மாற்றம் கொண்டுவந்துள்ளது.

1959–ம் வருடத்திய தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளில், பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சி துறை மற்றும் பஞ்சாயத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளில் மண், சவுடு, களிமண் மற்றும் வண்டல்மண் போன்றவற்றை விவசாய பணிகளுக்காக சீனியரேஜ் தொகை செலுத்தாமல், எவ்வளவு நிலம் இருந்தாலும் 30 கனமீட்டர் மட்டுமே எடுத்துச் செல்ல வழிவகை செய்யப்பட்டிருந்தது. அதுபோல விதி (6)ன் கீழ் ஆறு மற்றும் குளங்களில் உள்ள களிமண் மற்றும் வண்டல்மண் போன்ற

கனிமங்களை மண்பாண்டத் தொழில் செய்யும் மண்பாண்டத் தொழிலாளர்கள் சீனியரேஜ் தொகை செலுத்தாமல் 80 கனமீட்டர் எடுத்துச்செல்ல வழிவகை செய்யப்பட்டிருந்தது.

தற்போது செய்யப்பட்டுள்ள சட்டத் திருத்தங்களுக்குப் பிறகு கீழ்காணும் கூடுதல் சலுகைகள் விவசாயிகள் மற்றும் மண்பாண்டத் தொழிலாளர்கள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1. ஏற்கனவே விதி 6–ல் கூறப்பட்டுள்ள 800 மாட்டு வண்டி அளவிற்கான (80 கனமீட்டர் அளவு) களிமண் மற்றும் மண் எடுக்கும் உரிமைகளைத் தவிர, பொதுப் பணித்துறை, ஊரக வளர்ச்சிதுறை மற்றும் பஞ்சாயத் ராஜ்துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகள் மற்றும் இதர நீர்நிலைகளிலிருந்தும் சீனியரேஜ் தொகை செலுத்தாமல் 60 கனமீட்டருக்கு மிகாமல் எடுத்துச்செல்ல மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு விதி 12(b)–ன் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது.
2. பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பஞ்சாயத் ராஜ்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து நீர்நிலைகளில் தூர்வாரும்போது எடுக்கப்படும் மண் மற்றும் வண்டல்மண் விவசாய நிலங்களுக்கு உரமாக பயன்படும் என்பதாலும், விவசாயிகள் அதனை உபயோகப்படுத்தி அவர்களின் நிலங்களை மேம்படுத்தும் நோக்கத்தில் விவசாய பணிகளுக்கு சீனியரேஜ் தொகை இல்லாமல் நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்களுக்கு ஏற்றவாறும், நிலத்தின் விஸ்தீர்னத்திற்கு ஏற்றவாறும், தேவைப்படும் மண்ணை எடுத்துச்செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நஞ்சை நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 75 கனமீட்டருக்கு (25 டிராக்டர் லோடுகள்) மிகாமலும், புஞ்சை நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 90 கனமீட்டர் (30 டிராக்டர் லோடுகள்) மிகாமலும், நீர்நிலைகளிலிருந்து வண்டல்மண் எடுத்துச்செல்ல விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய விதிகள் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் தவிர்த்து அனைத்து மாவட்டங்களுக்கும் பொருந்தும்.

எந்தெந்த நீர் நிலைகளில் இருந்து மண் எடுக்கலாம் என்ற விபரம் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மாவட்ட அரசிதழில் வெளியிடப்படும்.

இதுகுறித்த வழிகாட்டு நெறிமுறைகள் பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறைகளால் வெளியிடப்படும்.

எனவே, விவசாயிகள் மற்றும் மண்பாண்டத் தொழிலாளர்கள் இந்த வறட்சி காலத்தில் பொதுப்பணித்துறை மற்றும் இதர துறைகளின் மூலம் எடுக்கப்படும் வண்டல் மண் மற்றும் களிம ண் ஆகியவற்றை பயன்படுத்தி தங்களது தொழில் மற்றும் விவசாய நிலங்களை மேம்படுத்திக் கொள்ளலாம். இந்த வாய்ப்பை விவசாயிகள் மற்றும் மண்பாண்டத் தொழிலாளர்கள் முழுமையாக பயன்படுத்த கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**